குன்றத்தூர் நகராட்சி ஆணையர் (பொ)அவர்களின் செயலாணைகள்

பிறப்பிப்பவர் : திருமதி.மு.ராணி, எம்.ஏ.,

ந.க.எண்.1638/2025/எப்1 **நாள்.13.06.2025**

பொருள்:- மனை உட்பிரிவு அங்கீகாரம் – காஞ்சிபுரம் மாவட்டம் – குன்றத்தூர் நகராட்சி – குன்றத்தூர் ஆ கிராமம் – நில அளவை எண்.672/27, 673/1A & 673/12-ல் அடங்கிய 1092 ச.மீ. பரப்பளவில் மனை உட்பிரிவு செய்தல் – அங்கீகாரம் வழங்குதல் – சார்ந்து.

பார்வை :-

1) உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும கடித எண்.CMDA/PP/Layout-1/0056/2025 நாள்.08.05.2025

2) மனைஉட்பிரிவு கட்டணம் ரூ.53500/- (செலுத்துச்சீட்டு எண்.179/001/1/25-26/0003677 நாள்.11.06.2025)

3) தொடர்புடைய ஆவணங்கள்.

****

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட குன்றத்தூர் ஆ கிராமம், நில அளவை எண்.672/27, 673/1A & 673/12-ல் அடங்கிய 1092 ச.மீ. பரப்பளவில் மனை உட்பிரிவு செய்ய M/s.Urban Tree Real Estates LLP represented by its Designated partner Thiru.Kapil Pansari GPA of M/s.Capital one Constructions Private Limited represented by its Managing Director Thiru.K.R.Jaganathan and Tmt.Sailaja Chitta என்பவரால் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டு, பார்வை 1ல் காணும் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும கடிதத்தின்படி மேற்படி நில அளவை எண்ணில் **8** மனைகளாக மனை உட்பிரிவு செய்து **P.P.No.OL-01773** என எண்ணிடப்பட்டு **நாள்.08.05.2025-ல்** மனைஉட்பிரிவுக்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மனைஉட்பிரிவு அங்கீகார கட்டணமாக ரூ.**53500**/-ஐ பார்வை 2ல் காணும் விவரப்படி செலுத்து சீட்டு மூலம் வசூலிக்கப்பட்டுள்ளது.

எனவே குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட குன்றத்தூர் ஆ கிராமம், நில அளவை எண்.672/27, 673/1A & 673/12-ல் அடங்கிய 1092 ச.மீ. பரப்பளவில் **8** மனைகளாக (மனை எண்.1 முதல் 8 வரை) உட்பிரிவு செய்து மேற்படி நிலத்தின் உரிமையாளர் **M/s.Urban Tree Real Estates LLP represented by its Designated partner Thiru.Kapil Pansari GPA of M/s.Capital one Constructions Private Limited represented by its Managing Director Thiru.K.R.Jaganathan and Tmt.Sailaja Chitta** என்ற பெயரில் மனைஉட்பிரிவு அனுமதி எண்.**12/2025-2026** என எண்ணிட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் மனைஉட்பிரிவு அங்கீகாரம் அளித்து உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1 சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும திட்ட அனுமதி எண். **P.P.No.OL-01773 நாள்.08.05.2025ல்** தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தவறாது கடைபிடித்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் மனை உட்பிரிவு அங்கீகாரம் ரத்து செய்யப்படும்.

2 இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் மனைஉட்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள விவரப்படி மனைகள் பிரித்து மாற்றம் செய்யாமல் விற்பனை செய்தல் வேண்டும் மற்றும் மனைஉட்பிரிவு வரைபடத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

3 இந்த ஆணை தணிக்கைத்தடைக்கு உட்பட்டதாகும்.

4 மனை உட்பிரிவு தொடர்பான இடத்தில் (புல எண்ணில்) உரிமை பிரச்சினை வருமேயானால் தாங்களே சிவில் / குற்றவியல் நீதிமன்றத்தில் தீர்வு பெற்றுக்கொள்ள வேண்டும். எந்த சூழ்நிலையிலும் நகராட்சி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் பொறுப்பேற்காது.

5 தவறான ஆவணம் சமர்ப்பித்து அனுமதி பெறப்பட்டது பின்னர் தெரியவந்தால் எந்த நேரத்திலும் வழங்கப்பட்ட உத்திரவு இரத்து செய்யப்படும்

13/6/25

ஆணையர் (பொ)
குன்றத்தூர் நகராட்சி

13/6/25

இணைப்பு :-
அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள்

பெறுநர்:-

1. **M/s.Urban Tree Real Estates LLP represented by its Designated partner Thiru.Kapil Pansari GPA of M/s.Capital one Constructions Private Limited represented by its Managing Director Thiru.K.R.Jaganathan and Tmt.Sailaja Chitta,**
   No.8., Rutland Gate, 5th Street, Nungambakkam, Chennai 600006
2. வருவாய் ஆய்வாளர், குன்றத்தூர் நகராட்சி,
   (காலிமனை வரி தொடர்ந்து வசூலிக்க இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது)

நகல் :-

1. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், எழும்பூர், சென்னை – 8
2. வட்டாட்சியர், வருவாய்த்துறை, குன்றத்தூர்
3. நகராட்சி பொறியாளர், குன்றத்தூர் நகராட்சி
   (சாலைப்பதிவேட்டில் பதிந்து உரிய நடவடிக்கைக்கு)